காலை முரசு

பக்கங்கள் 16

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | புரட்டாதி 04 சனிக்கிழமை 20.09.2025 | அதிர்வு 50

## திலீபனுக்கு நல்லூரில் இன்று ஆவணக் காட்சியகம் திறப்பு!



தியாக தீபம் திலீபனின் 38ஆவது ஆண்டு நினைவேந்தலை முன்னிட்டுத் திலீபனின் வரலாற்றை 05

# காங்கேசன்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்யவே முடியாது!

## அமைச்சர் பிமல் ரத்நாயக்க அழிச்சாட்டியம்

## இந்திய அரசு வழங்கிய பணம் போதாதாம்

(ந.லோகதயாளன்)

யாழ். காங்கேசன்துறை துறைமுகத்தை வணிகத் துறைமுகமாக மாற்ற முடியாது எனப் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில்விமானசேவைகள்அமைச்சர் பிமல் ரத்நாயக்க யாழ்ப்பாணத்தில் இறுமாப்புப் உரை நிகழ்த்தியிருக்கின்றார்.

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த அமைச்சர் நேற்றுமுன்தினம் யாழ். மாவட்ட செயலகத்தில் நடத்திய விசேட அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலேயே இதனைத் தெரிவித்தார்.

அமைச்சர் இதன்போது மேலும் கூறுகையில்,

"யாழ். காங்கேசன்துறையில் உள்ள துறைமுகத்தை வணிகத் துறைமுகமாக அபிவிருத்தி செய்ய மாட்டோம். அத்தோடு இந்தியா இதற்கு ஒதுக்கிய பணமும் துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்குப் போதாது." - என்றார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் துறைமுக அபிவிருத்தி தொடர்பில் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

காங்கேசன்துறை துறைமுகத்தின் அபிவிருத்திகள் துரிதப்படுத்தப்படுவதோடு யாழ். பலாலி விமான நிலையப் பாதுகாப்புக்காகச் சுவீகரித்து வைத்துள்ள மக்களின் காணிகள் விடுவிக்கப்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், துறைசார் அமைச்சர் பிமல் ரத்நாயக்காவிடம் கோரிக்கை முன்வைத்தார். 06




# ரணில் தலைமையில் இன்று ஐ.தே.கவின் ஆண்டு விழா

## சகல எதிர்க்கட்சிகளுக்கும் அழைப்பு; சஜித் பங்கேற்கமாட்டார்

ஐக்கிய தேசியக் கட்சியின் 79 ஆவது ஆண்டு விழா இன்று நடைபெறவுள்ளது.

கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் பத்தரமுல்லையில் உள்ள மோனார்க் இம்பீரியல் ஹோட்டலில் இன்று காலை 9 மணிக்கு இந்த விழா ஆரம்பமாகவுள்ளது.

"ஒன்றாக நிற்போம், ஜனநாயகத்தைப் பாதுகாப்போம், அனைத்து சக்திகளையும் ஒன்றிணைப்போம்." – என்ற கருப்பொருளில் ஐக்கிய தேசியக் கட்சியின் 05





அண்மைக் காலத்தில் ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல், உள்ளூராட்சி சபைத் தேர்தல் என மூன்று தேர்தல்களை அடுத்தடுத்துத் திறம்பட நடத்தித் தேர்தல் ஆணையம் சாதனை படைத்துள்ளது என்றாலும், கடைசியாக நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அது பண்ணிய 'குசும்புத்தனங்கள்' மறக்க கூடியவை அல்ல.

வேட்புமனுக்களைப் பூர்த்தி செய்வது மற்றும் ஏற்பது தொடர்பாக அது விதித்த ஒழுங்கு விதிகள், அவை தொடர்பில் அது கொடுத்த வியாக்கியானங்கள், அந்த வியாக்கியானங்கள் காரணமாக கட்சிகள் மற்றும் குழுக்களின் பல நூற்றுக்கணக்கான வேட்பு மனுக்கள் கூண்டோடு 05



# போர்க்குற்றங்களால் பாதிக்கப்பட்டோருக்கு உள்ளகப் பொறிமுறை மூலம் நீதி நிச்சயம்

## பிரதமர் ஹரிணி தெரிவிப்பு

"இலங்கையில் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உள்ளகப் பொறிமுறை ஊடாக நீதி நிலைநாட்டப்படும் என்ற உறுதிமொழியை நிறைவேற்றுவதில் தேசிய மக்கள் சக்தி அரசு பொறுப்புணர்வுடன் செயற்பட்டு வருகின்றது. இந்த நாட்டில் வாழும் அனைத்து இன மக்களினதும் சம உரிமைகள் உறுதிப்படுத்தப்படும் சூழல் உருவாக்கப்படும்."

– இவ்வாறு பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

தென்னிலங்கை ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"உள்ளகப் பொறிமுறை ஊடாக நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்பது நாம் வழங்கிய உறுதிமொழிகளில் ஒன்றாகும். எனவே, அது தொடர்பில் எமக்குப் பாரிய பொறுப்பு இருக்கின்றது.

இந்த நாட்டில் நல்லிணக்கம் என்பது மிக முக்கியம். தமது உரிமைகளை அரசு பாதுகாக்கின்றது என அனைத்து இன மக்களும் உணரும் நிலை ஏற்பட வேண்டும். இதற்காக நீதித்துறையின் சுயாதீனம் குறித்து நம்பிக்கை ஏற்பட வேண்டும்.

எந்தவொரு விசாரணைகளிலும் அரசியல் ரீதியில் அரசு கையடிப்பதில்லை. அதனால்தான் கடந்த காலங்களில் மறைக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பில்கூட விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

குறிப்பாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கு என்ன செய்யலாம், நல்லிணக்க பக்கத்தில் எவ்வாறு தலையீடுகளை மேற்கொள்ளலாம் என்பது பற்றி நீதி அமைச்சு கலந்துரையாடல்களை நடத்தி வருகின்றது. இவற்றுடன் தொடர்புடைய அலுவலகங்களை வலுப்படுத்துவது பற்றி அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

நாம் இனவாதத்தை தூண்டுவதில்லை. இனவாத அரசியலை நிராகரிக்கின்றோம். இனவாத நோக்கில் முடிவுகள் எடுக்கப்படுவதில்லை. அதனால்தான் அனைத்து இன மக்களும் இந்த அரசு மீது நம்பிக்கை வைத்துள்ளனர்." – என்றார்.

# சஷீந்திரஷவுக்கு விளக்கமறியல் நீடிப்பு

முன்னாள் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷவை எதிர்வரும் 22 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் நேற்று வெள்ளிக்கிழமை உத்தரவிட்டுள்ளது.

சஷீந்திர ராஜபக்ஷவின் சார்பாகத் தாக்கல் செய்யப்பட்ட பிணை மனு மீதான உத்தரவும் எதிர்வரும் 22 ஆம் திகதி வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

2022 ஆம் ஆண்டில் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களின் போது தீக்கிரையாக்கப்பட்ட செவனகல – கிரிப்பன் வேவ பகுதியில் உள்ள அரச நிலத்துக்கு மற்றொரு நபர் மூலம் இழப்பீடு பெற்ற சம்பவம் தொடர்பில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ நுகேகொடை பகுதியில் உள்ள அவரது வீட்டில் வைத்து இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் கடந்த ஓகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி கைது செய்யப்பட்டிருந்தார்.



அவர் கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் பிமல் - சிறீதரன் வாய்த்தர்க்கம்

## வடக்கில் காணி விடுவிப்பை அரசியல் மயப்படுத்த இடமளியோம் என்று அமைச்சர் கூறுரை



"வடக்கில் போர்க் காலத்தில் பாது காப்பு நோக்கங்களுக்காகவே அரசால் மக்களின் காணிகள் கையகப்படுத்தப் பட்டன. இந்த விவகாரத்தை அரசியல் அனுகூலங்களைப் பெறும் நோக்கில் பயன்படுத்த இடமளிக்கப்படமாட்டாது. வடக்கில் பெரும்பான்மையான மக்கள் ஏனைய கட்சிகளை விட தேசிய மக்கள் சக்திக்கே வாக்களித்திருக்கின்றனர். எனவே, அவர்கள் தொடர்பில் ஏனைய கட்சிகளை விட எமக்குப் பொறுப்புக்கள் அதிகம்."

– இவ்வாறு அமைச்சர் பிமல் ரத் நாயக்க தெரிவித்தார்.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சின் கீழ் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கூட்டப்பட்ட யாழ்ப்பாணம் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தின் போது, வடக்கில் காணி விடுவிப்பு குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கேள்வி எழுப்பிய போதே அமைச்சர் இதனைக் கூறினார்.

இது தொடர்பில் சிறீதரன் எம்.பி. கேள்வி எழுப்பிய போது அமைச்சர் பிமல் ரத்நாயக்கவுக்கும் அவருக்கும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. சிறீதரன் எம். பி. உரத்த குரலில் கேள்வி எழுப்பிய போது, பதிலளித்த அமைச்சர் பிமல், "எனக்கு உங்களை விட உரத்த குரலில் பேச முடியும். உங்களுக்கு தேவையான பிரசாரம் கிடைத்து விட்டதென நினைக் கின்றேன். எனவே தற்போது நான் கூறுவதைக் கேளுங்கள்." – என்றார்.

காணி விடுவிப்பு தொடர்பில் அமைச்சர் மேலும் குறிப்பிடுகையில்,

"அரசு காணிகளை விடுவிக்க வேண்டும் என்று சுமந்திரன் ஊடகங் களிடம் கருத்து வெளியிடுகின்றார்.

அரசு எங்குமே நேரடியாகச் சென்று காணிகளை விடுவிப்பதில்லை. இந்தக் காணிப் பிரச்சினையை நாம் அரசி யல் இலாபங்களுக்காகப் பயன்படுத் தப் போவதில்லை. 30 ஆண்டுகள் மூடப்பட்டிருந்த வீதிகளை நாம் திறந் திருக்கின்றோம். அதற்காக நாம் கொண்டாட்ட நிகழ்வுகளை ஏற்பாடு செய்யவில்லை.

இராணுவக் கட்டளைத் தளபதி களால் காணி உரிமங்கள் மாவட்ட அதிபர் களிடம் வழங்கப்பட்டுள்ளன. அவற் றைக் கொண்டு நாம் பிரசாரங்களை முன்னெடுக்கவில்லை.

அந்தக் காலப்பகுதியில் பாதுகாப்பு காரணிகளுக்காகவே மக்களின் இடங்கள் அரசால் கையகப்படுத்தப்பட்டன. இவ்வாறு பாதுகாப்பு காரணிகளுக்காகக் கைய கப்படுத்தப்பட்ட காணிகளைப் பாது காப்பு தேவை இல்லாபட்சத்தில் மீளக் கையளிக்குமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியிருக்கின்றார்.

அவ்வாறு காணிகளை விடுவிப்ப தற்கு வைபவங்களை ஏற்பாடு செய்ய வேண்டிய தேவை கிடையாது. நாம் அவ்வாறு செய்யாத நிலையில், சிலர் சென்று எம்மால் தான் காணி விடு விக்கப்பட்டது எனக் கூறிக் கொண்டிருக் கின்றனர். வடக்கில் உள்ள மக்கள், தேசிய மக்கள் சக்திக்கு அதிகளவில் வாக்களித்திருக்கின்றனர்.

எனவே, உங்களை விட எங்களுக்கு அதிக பொறுப்புக்கள் உள்ளன. நாம் மக்களுக்காகச் சேவையாற்றுவோம். ஏனைய ஆட்சிக் காலங்களை விட நாம் வடக்குக்கு அதிக அபிவிருத்திகளை முன்மொழிந்திருக்கின்றோம்." – என்றார்.



# ரயிலில் மோதி வயோதிபர் ஒருவர் பலி!

ரயிலில் மோதி வயோதிபர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று பொலன றுவை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கத்துருவெல ரயில் நிலையத்துக்கு அருகில் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் தொடர்பில் இதுவரை எந்தவித தகவல்களும் கிடைக்கவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

70 வயது மதிக்கத்தக்க வயோதிபர் உயிரிழந்துள்ளார் என்று பொலனறுவை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த ரயிலில் மோதியே வயோதிபர் உயிரிழந்துள்ளார்.

சடலம் பொலனறுவை வைத்தியசாலை யின் பிரேத அறையில் வைக்கப்பட் டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணை களை பொலனறுவை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.

# மோ. சைக்கிளுடன் ஓட்டோ மோதி பெண் ஒருவர் பரிதாப உயிரிழப்பு

கோர விபத்தில் பெண் ஒருவர் உயிரி ழந்துள்ளார் என்று பொலிஸார் தெரி வித்துள்ளனர்.

இந்த விபத்து காலி, கொஸ்கொடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோனபல பிர தேசத்தில் நேற்று இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளுடன் ஓட்டோ மோதி யதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.



விபத்தின் போது மோட்டார் சைக் கிளின் செலுத்துநரும் பின்புறத்தில் பயணித்த பெண்ணும் படுகாயமடைந்த நிலையில் பலப்பிட்டிய வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் பெண் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் கல்துடுவ பிரதேசத்தைச் சேர்ந்த 66 வயதுடைய பெண் ஆவார்.

இதனையடுத்து ஓட்டோ சாரதி பொலி ஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த விபத்து தொடர்பில் கொஸ் கொடை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கொழும்பில் இருந்து மட்டக்களப்புக்கு வந்த ரயிலில் கைவிடப்பட பொதி ஒன்றில் 200 கிராம் ஐஸ் மீட்பு!

**(கனகராசா சரவணன்)**

கொழும்பில் இருந்து மட்டக்களப்புக்கு ரயிலில் கடத்தி வரப்பட்ட 200 கிராம் போதை பொருள் அடங்கிய கைவிடப்பட்ட பை ஒன்றை நேற்று மவெள்ளிக்கிழமை மாலை மட்டக்களப்பு வந்தடைந்த ரயி லில் இருந்து மீட்டு தங்களிடம் ஒப்படைக் கப்பட்டுள்ளதாக மட்டு. தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பில் இருந்து மட்டக்களப்பு ரயில் நிலையத்தை நேற்று மாலை 4.10 மணிக்கு வந்தடைந்த ரயிலில் கைவிடப் பட்ட பை ஒன்றை ரயில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் கண்டுபிடித்த னர்.

இதனையடுத்து அந்தப் பையை மீட்டு ரயில் நிலைய அதிபரிடம் ஒப்படைத்த னர். இதனையடுத்து கைவிடப்பட்ட பை யாருடையது என அறிய பையைத் திறந்தபோது அதற்குள் போதைப் பொருள் கிடப்பதை கண்டு பொலிஸா





ருக்கு அறிவித்தனர்.

இந்த நிலையில் ரயில் நிலையத் திற்கு சென்ற பொலிஸார் பையைத் திறந்தபோது அதில் பொதி செய்யப்பட்ட 252 பக்கட்டுக்களை கொண்ட 200 கிராம் ஐஸ் போதைப் பொருளை மீட்ட னர்.

இவ்வாறு கைவிடப்பட்ட நிலையில் மீட்கப்பட்ட போதை பொருளை நீதிமன் றில் ஒப்படைப்பதற்கான நடவடிக்கையை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசா ணைகளை மட்டு தலைமையகப் பெரும் குற்றத்தடுப்பு பிரிவுப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## இரகசியம் பரகசியம்...

நிராகரிக்கப்பட்டமை, அது தொடர்பான நீதிமன்ற விடயங்களை தேர்தல் ஆணையம் கையாண்ட முறைமை, உயர்நீதிமன்றத்தின் வியாக்கியானத் துக்கும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் வியாக்கியானத்திற்கு இடையில் உள்ள வேறுபாட்டைக் களைந்து நீதி செய்ய முயற்சி எடுக்காமல் உள்ளது உள்ளபடி தேர்தலை நடத்தி முடிக்கக் காட்டிய அசிரத்தைப் போக்கு, அதனால் பல குழுக்களுக்கும் கட்சிகளுக்கும் ஏற்பட்ட மோசமான பாதிப்பு என்று உள்ளூராட்சி சபைத் தேர்தல் விடயத்தில் பல குழப்பங்களை தேர்தல் ஆணையமும் சேர்ந்தே ஒப்பேற்றியது என்பதை மறுப்பதற்கு இல்லை.

அந்த வரிசையில், தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீரத்நாயக்க யாழ்ப்பாணத்திற்கு வந்து, சாவகச்சேரி பிரதேச சபை மற்றும் சாவகச்சேரி நகர சபை ஆகியவை தொடர்பான நீதிமன்ற விவகாரங்கள் குறித்து கருத்து தெரிவித்து சென்றிருக்கின்றமையைக் கவனிக்க வேண்டியதாக உள்ளது.

"அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் சாவகச்சேரி நகர சபை மற்றும் பிரதேச சபை வேட்புமனுக்களை சவாலுக்கு உட்படுத்தி நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கினுடைய தீர்ப்பு இன்னமும் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு வழங்கப்படவில்லை. நீதிமன்றத் தீர்ப்பு தேர்தல் ஆணைக்குழுவுக்கு கிடைக்கப் பெற்றதன் பிற்பாடு தேர்தல்கள் ஆணைக்குழு கூடி இது சம்பந்தமாக முடிவுகளை எடுக்கும்."

– இவ்வாறு தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்திருக்கின்றார்.

மேற்படி இரண்டு சபைகள் தொடர்பான உயர் நீதிமன்ற வழக்கில் தேர்தல் ஆணையமும் ஒரு பிரதிவாதித் தரப்பு. நீதிமன்றம் தீர்ப்பளித்து ஏழு வாரங்களுக்கு மேலாகிவிட்டது. ஆனால் இன்னமும் தங்களுக்கு தீர்ப்பின் பிரதி கிடைக்கவில்லை என்று தேர்தல் ஆணையம் சமாதானம் – சமாளிப்பு – கூறுவது வழமையான அரசு அலுவலகங்களின் சிவப்பு நாடாத் தனமாகவே தெரிகின்றது.

சரி, நீதிமன்றமும் தேர்தல் ஆணையத்தைத் தேடி, தீர்ப்பை அல்லது உத்தரவின் பிரதியை பிரதிவாதிகளுக்கு அனுப்பவில்லை என்றும் வைத்துக் கொள்வோம். அல்லது தேர்தல் ஆணையம் சார்பில் நீதிமன்றத்தில் பிரசன்னமான சட்டமா அதிபர் தரப்பும் இந்த விவகாரம் தொடர்பான உயர் நீதிமன்றத் தீர்ப்பை இன்னமும் கூட தேர்தல் ஆணையகத்துக்கு அனுப்பவில்லை என்றும் வைத்துக் கொள்வோம். சரி, இது தொடர்பாக பத்திரிகைகளில் வந்த செய்திகளின் அடிப்படையில் கூட இப்படி ஒரு தீர்ப்பு வந்திருக்கின்ற விவரமும் தேர்தல் ஆணையத்துக்குக் கிடைக்கவில்லை, அதனால் உயர்நீதிமன்றத் தீர்ப்பை தேர்தல் ஆணையம் தேடிப் பெற முயற்சிக்கவில்லை என்றும் வைத்துக் கொள்வோம்.

ஆனால், இந்தத் தீர்ப்பின் அடிப்படையில் தற்போது இரண்டு உள்ளூராட்சி சபைகளிலும் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சி சார்பில் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்கள் அதற்கான தகுதி இல்லாதவர்கள் – அல்லது தகுதி இழந்தவர்கள் – என்று குறிப்பிட்டு, மேற்படி உயர்நீதிமன்றத் தீர்ப்பைக் கோடிகாட்டி, ஆகவே அந்த உறுப்பினர் பதவிகளை அவர்களிடமிருந்து விலக்கி, தங்களுக்கு வழங்க வேண்டும் என்று இந்த விடயத்தில் பாதிக்கப்பட்ட உறுப்பினர்கள் தேர்தல் ஆணையத்துக்கு பதிவுத்தபாலில் நீதிமன்ற தீர்ப்பு விவரத்துடன் கடிதங்கள் அனுப்பியும் ஐந்து வாரங்களாகி விட்டன.

அதற்குப் பின்னரும், இன்னமும் உயர்நீதிமன்றத் தீர்ப்பின் பிரதி எங்களுக்குக் கிடைக்கவில்லை, கிடைத்த பின்னர் பார்க்கலாம் என்ற பாணியில் தேர்தல் ஆணையாளர் நாயகம் பதில் கூறுவது அபத்தமாகும்.

தேசியப் பட்டியலில் தெரிவான நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் இன்று ராஜினாமா செய்தால், அடுத்த நாள் அவர் இடத்துக்கு புதியவரை நியமிக்கும் வேகமான அரசியல் செயற்பாட்டைக் கொண்ட தேர்தல் ஆணையம் இந்த விடயத்தில் மாத்திரம் நொண்டுவது ஏன் என்று விளங்கவில்லை.

தேர்தல் ஆணையத்தின் இந்தப் போக்கை புரிந்து கொண்டுதான், அதற்கு முறையீடு செய்து, அதன் மூலம் சரியான நிவாரணம் கிடைக்காது என்ற நம்பிக்கையீனத்தில்தான் சம்பந்தப்பட்ட உறுப்புரிமை தங்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று கோரும் தமிழரசுக் கட்சி வேட்பாளர்கள் இப்போது யாழ்ப்பாணத்தில் செயற்படும் வடக்கு மாகாண மேல் நீதிமன்றத்தில் தேர்தல் மனுவைத் தாக்கல் செய்திருக்கின்றார்கள்.

இந்த இரண்டு பிரதேச சபைகளிலும் போட்டியிட்ட அனைத்து வேட்பாளர்களும் இந்த வழக்கில் எதிர்மனுதாரர்கள். வழக்கு நாளைமறுதினம் திங்கட்கிழமை 22ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட இருக்கின்றது.

இந்த வழக்கு கடந்த மாதம் 28 ஆம் திகதி நீதிமன்றத்தினால் பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டு, எதிர்மனுதாரர்களான ஏனைய வேட்பாளர்கள் அனைவருக்கும் நோட்டீஸ் பிறப்பிக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

1946 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல் கட்டளைச் சட்டம் 82(ပ)2 பிரிவின்படி இந்த வழக்கு நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட திகதியிலிருந்து – அதாவது ஓகஸ்ட் மாதத்தில் இருந்து – ஆறு மாத காலத்துக்குள் விசாரித்து முடிவுறுத்தப்பட வேண்டும். அதன்படி வரும் ஜனவரி மாதத்துக்குள் இந்த வழக்கின் தீர்ப்பை வடக்கு மேல் நீதிமன்றம் வழங்க வேண்டி இருக்கும். வழக்கை இழுபட நீதிமன்றம் விடாது.

மேற்படி இரண்டு உள்ளூராட்சி சபைகளுக்கும் தாக்கல் செய்யப்பட்ட அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் வேட்பாளர் பட்டியலில் தலா ஒவ்வொரு பெண் வேட்பாளர்கள், அந்த வேட்பாளர் பட்டியல்களில் போட்டியிடுவதற்கான தகைமை உடையவர்கள் அல்லர் என்று உயர் நீதிமன்றம் ஏற்கனவே தீர்ப்பளித்து விட்டது. உயர் நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிரான மேன்முறையீட்டுக்கோ மீள்பரிசீலனைக்கோ இடமில்லை. இந்த பின்புலத்தில் அந்த இரண்டு பெண் வேட்பாளர்களும் வேட்புமனுக்களில் இடம்பெறத் தகுதியற்றவர்கள் எனின், அந்த இரண்டு வேட்பு மனுக்களிலும் பெண் வேட்பாளர்களின் விகிதாசாரம் குறைந்து, அந்த இரு வேட்புமனுக்களுமே நிராகரிக்கப்பட வேண்டிய நிலை உருவாகி உள்ளது என்பது இப்போது வடக்கு மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ள தமிழரசுக் கட்சி வேட்பாளர்களின் நிலைப்பாடு ஆகும்.

ஆக, இந்த இரண்டு சபைகளுக்கும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி தாக்கல் செய்த வேட்பு மனுக்கள், உயர்நீதிமன்றம் வழங்கிய உத்தரவுக்கு அமைய செல்லுபடியற்றவை என்ற தீர்ப்பை வடக்கு மேல் நீதிமன்றம் வழங்குமானால், சாவகச்சேரி நகர சபையில் காங்கிரஸ் கட்சியின் ஆறு உறுப்பினர்களும், சாவகச்சேரி பிரதேச சபையில் அக்கட்சியின் ஐந்து உறுப்பினர்களும் பதவியை இழப்பார்கள். வாக்குகளின் எண்ணிக்கையில் அடுத்த நிலையில் இருப்பவர்களும், புதிய விகிதாசாரக் கணிப்பீட்டில் புதிய பட்டியல் உறுப்பினர்களும் சபைக்குப் புதிதாக வரும் நிலைமை ஏற்படும். அது மாத்திரமில்லாமல் சாவகச்சேரி பிரதேச சபை தவிசாளர் பதவியும், சாவகச்சேரி நகர சபையின் நகர பிதா பதவியும் கூட மாறும் சூழ்நிலை ஏற்படும்.

வழக்கில் வேறு தொழில்நுட்பப் பிரச்சினைகள் ஏற்பட்டாலேயன்றி, அப்படி பதவிநிலை மாற்றங்கள் ஏற்படுவதற்கான சட்ட வாய்ப்புகள் இந்த வழக்கில் அதிகமாக இருக்கின்றன என்றே என் மனதுக்குப் படுகின்றது.

எது, எப்படி என்றாலும், முடிவெடுக்க வேண்டியது வடக்கு மேல் நீதிமன்றம். அந்த நீதிமன்றத் தீர்ப்பையும் தாண்டி, மேன்முறையீடுகள் செய்வதற்கும் மேலும் பல நீதிமன்றங்கள் உள்ளன. என்ன நடக்கும் என்பதை இருந்துதான் பார்க்க வேண்டும்.

## திலீபனுக்கு...

அடுத்த சந்ததிக்குக் கடத்தும் விதமாக இன்று சனிக்கிழமை மாலை ஆவணக் காட்சியகம் திறந்து வைக்கப்படவுள்ளது.

'பார்த்தீபன் திலீபனாக! திலீபன் தியாக தீபமாக!' எனும் தொனிப்பொருளில், தியாக தீபம் திலீபன் நினைவுத் தூபிக்கு முன்பாக, மாவீரர்களின் பெற்றோர், முன்னாள் போராளிகளின் பங்கேற்புடன் இந்த ஆவணக் காட்சியகம் திறந்து வைக்கப்படவுள்ளது.

## ரணில் தலைமையில்...

ஆண்டு விழா இம்முறை இடம்பெறவுள்ளது.

இந்த விழாவில் பங்கேற்பதற்கு எதிரணியில் உள்ள அனைத்து கட்சிகளின் தலைவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

எனினும், இந்த விழாவில் எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ பங்கேற்கமாட்டார் என்று அறியமுடிகின்றது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார மற்றும் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமே கட்சி சார்பில் கலந்து கொள்வார்கள் எனத் தெரியவருகின்றது.

கட்சியின் வாழ்த்துச் செய்தியை வழங்குவதற்காகவே ரஞ்சித் மத்தும பண்டார இந்த விழாவில் பங்கேற்கச் செல்கின்றார்.




# வீரவணக்கம் திலீபா..!

தமிழ் மக்களுக்காக உண்ணா நோன்பு இருந்து தனது உயிரை ஆகுதி யாக்கிய தியாக தீபம் திலீபனின் 38 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இக் கவிதை பிரசுரிக்கப்படுகின்றது.

தமிழினத்தின் விடிவுக்காய்
புறப்பட்ட வீர மறவர்களில்
அகிம்சையைக் காந்திய
தேசத்துக்கே போதித்த
உத்தமனே திலீபா..!

இலங்கை - இந்திய கூட்டு
சதியால் அமைதிப் படை
தமிழினத்தை வேட்டையாட
தலை நிமிர்ந்த
தலைமகனே திலீபா..!

பக்தி வெள்ளம் பாயும்
நல்லூர் தேரோடும் வீதியில்
காந்திய தேசத்தை நோக்கி
ஐந்தம்சக் கோரிக்கைகளை வைத்து
உண்ணாமல் நீர் இல்லாமல்
இருந்தவனே திலீபா..!

ஆண்டுகள் முப்பெத்டு கடந்தாலும்
தமிழினத்துக்கு இன்னும்
தீர்வில்லை - உன் கனவு
கனவாகவே போயிருமோ
என்ற ஏக்கத்துடன் நாம்
தியாக தீபமே திலீபா..!

உன் நினைவு நாளில்
எழுச்சி கொள்ளும்
தமிழர் தேசம் இலட்சியத்துக்காய்
மரணித்த உன் தியாகத்துக்கு
செலுத்துகின்றது வீரவணக்கம் திலீபா..!



மகேஸ்வரன்
ரவிராஜ்

# பாதுகாப்பு அச்சுறுத்தல் மஹிந்தவுக்கு உள்ளதாம்

## பதறுகின்றார் முன்னாள் பிரதி அமைச்சர் சாந்த பண்டார

"விடுதலைப்புலிகள் அமைப்பு ஆயுத ரீதியில் தோற் கடிக்கப்பட்டிருந்தாலும், பிரிவினைவாத சிந்தனை யுள்ள பலரால் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் உள்ளது."

- இவ்வாறு முன்னாள் பிரதி அமைச்சர் சாந்த பண் டார தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறிய தாவது:-

"மஹிந்தவுக்கு மூன்று மகன்மார் உள்ளனர். அவர் களால் மஹிந்த ராஜபக்ஷவைப் பார்த்துக்கொள்ள முடியாதா?" என்று சிலர் கேட்கின்றனர். தனது தந்தையை பார்த்துக்கொள்ளும் இயலுமை நாமலுக்கு உள்ளது. எனினும், பிரிவினைவாதப் போரை முடிவுக்குக் கொண்டு வந்த மஹிந்தவுக்குப் பாதுகாப்பு வழங்குவதில்தான் பிரச்சினை உள்ளது.

விடுதலைப்புலிகள் அமைப்பு ஆயுத ரீதியில் தோற்கடி கப்பட்டிருந்தாலும் பிரிவினைவாத சிந்தனையுடை யோர் இன்னும் இருக்கின்றனர். இந்த நாட்டை அராஜக நிலைக்குக் கொண்டு செல்ல முற்படுகின்றனர். அத னால்தான் அரகலய காலத்தில்கூட நிதி வாரி வழங்கப் பட்டது. அதன் மற்றுமொரு அங்கமாகவே மஹிந்த வெளியேற்றப்பட்டுள்ளார்." - என்றார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**காங்கேசன்துறை...**

இதன்போது பதிலளித்த அமைச்சர்,

"யாழ். காங்கேசன்துறை துறைமுகத்தை வணிகத் துறைமுகமாக அபிவிருத்தி செய்ய மாட்டோம். ஏனெ னில் வணிகத் துறைமுகமாக அபிவிருத்தி செய்வதற்குப் பொருத்தமான காரணிகள் ஏதுவாக இல்லாத நிலை யில் அம்பாந்தோட்டை மற்றும் ஒலிவில் துறைமுகங்கள் போன்று காங்கேசன்துறை துறைமுகத்தையும் மாற்ற எமது அரசு விரும்பவில்லை.

அதுமட்டுமல்லாது காங்கேசன்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்கு இந்தியா வழங்கிய நிதி போதாது." - என்றார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், "இந்தியாவிடம் வேண்டுமானால் நாங்கள் பேசி மேலதிக நிதியைப் பெற்றுத் தருகின்றோம். துறைமுகத்தை அபிவிருத்தி செய்யுங்கள்." - என்று கூறியபோது, பதில் வழங்கிய அமைச்சர், "இந்தியாவிடம் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பல தடவைகள் பேசியுள்ளார். நாங்களும் பேசியுள்ளோம். ஆனால், வணிகத் துறைமுகமாக அதை மாற்ற முடியாது." - என்றார்.

இதன்போது குறுக்கிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், "நீங்கள் எவ்வாறு ஆய்வு செய்யா மல் பொருத்தமில்லை எனக் கூற முடியும்?" - என்று கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர், "ஆய்வு அறிக்கை இருக்கின்றது. நாடாளுமன்றத்தில் உங்களுக்கு வழங்கு கின்றேன்." - என்றார்.

"யாழ்ப்பாணம் பலாலி விமான நிலையப் பாதுகாப் புக்காக சுவீகரிக்கப்பட்ட பொதுமக்களின் காணிகளை எப்போது விடுவிப்பீர்கள்? ஏற்கனவே சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கு ஏன் நட்டஈடு வழங்கவில்லை?" - என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் மீண்டும் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதில் வழங்கிய அமைச்சர், "மக்களின் காணிகள் மக்களுக்கு என்பது எமது அரசின் நிலைப் பாடு. யாழ். புலாலை விமான நிலையப் பாதுகாப்புக் காகச் சுவீகரித்த காணி விடுவிப்பு தொடர்பில் தற்போது கூற முடியாது. பாதுகாப்புத் தரப்பினருடன் கலந்துரை யாடியே பதில் வழங்க முடியும்." - என்றார்.

(இந்த விசேட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் அமைச் சர் பிமல் ரத்நாயக்கவுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனுக்கும் இடையில் இடம்பெற்ற வாய்த் தர்க்கம் தொடர்பான மேலுமொரு செய்தி 3 ஆம் பக்கத் தில்)

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## பொதுத்துறை ஊழியர்களின் அவலம்

சமீபத்திய ஆண்டுகளில் இலங்கையில் உயர்ந்து வரும் அதிக பணவீக்கம், பொதுத்துறை ஊழியர்கள் மற்றும் ஒய்வூதியர்களின் வாங்கும் சக்தியை பெரிதளவில் பாதித்து, அவர்களை மிக மோசமான நெருக்கடிக்குள் தள்ளி இருப்பதாக உலக வங்கி தெரிவித்திருக்கின்றது.

இலங்கையின் பொதுத்துறை ஊழியர்கள் மற்றும் ஒய்வூதியர்களைப் பொறுத்தவரை அவர்களுக்கு வழங்கப்படும் வேதன அதிகரிப்பு, நாட்டில் வேகமாக உயர்ந்து வரும் பணவீக்கப் போக்குக்கு ஏற்ற வேகத்தைத் தரவில்லை. இதனால் அவர்கள் தங்களுடைய வாழ்க்கைச் செலவுகளை ஈடுகட்ட முடியாமல் அதனுடன் மோசமாக மல்லுக்கட்ட வேண்டிய நெருக்கடியில் சிக்கி உள்ளனர் என்ற உண்மையை உலக வங்கி வெளிப்படுத்தி இருக்கின்றது.

2018 தொடக்கம் 2003 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பொதுத்துறை ஊழியர்களின் ஊதியங்கள் மற்றும் ஒய்வூதியர்களுக்கான கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட்ட போதிலும், அந்தக் காலப்பகுதியில் ஏற்பட்டு வந்த பண வீக்கத்துக்கு ஈடு கொடுக்கும் விதத்தில் அந்த அதிகரிப்பு அமையவில்லை என்று சுட்டிக் காட்டப்படுகின்றது. இதனால் பொதுத்துறை ஊழியர்கள் மற்றும் ஒய்வூதியர்களின் வாங்கும் சக்தி மழுங்கடிக்கப்பட்டு, அவர்கள் அன்றாட வாழ்வுக்கு அல்லாட வேண்டிய நிலைமை ஏற்பட்டிருப்பதாக உலக வங்கி தெரிவிக்கின்றது.

இந்தக் காலப்பகுதியில் வேதனம் மற்றும் ஒய்வூதிய அதிகரிப்புக்கும் பணவீக்கத்திற்கும் இடையிலான வேறுபாடு காரணமாக பொதுத்துறை ஊழியர்கள் 33 சதவீதத்தினாலும், ஒய்வூதியர்கள் 26 வீதத்தினாலும் வாங்கும் திறனை இழந்து உள்ளனர் என்றும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

இந்தப் போக்கு குறைந்த வருமானம் கொண்ட அரச ஊழியர்களை, விகிதாசார ரீதியாக மோசமாகப் பாதித்துள்ளது என்று உலக வங்கியின் அறிக்கை எச்சரிக்கின்றது.

2019 மற்றும் 2022 தொழிலாளர் அணிகளின் கணக்கெடுப்புகள் பற்றிய தரவுகள், வருமானப் பட்டியலில் கீழ்மட்டத்தில் உள்ள சுமார் 30 சதவீத பொதுத்துறை ஊழியர்கள் தங்கள் தனியார் துறை சகாக்களை விட கணிசமான அதிக வாங்கும் சக்தியை இழந்துள்ளனர் என்பதை அறிக்கை சுட்டுகின்றது.

‘இலங்கையில் பொது நிதி மதிப்பாய்வு - சமநிலையான நிதி சரிசெய்தலை நோக்கி....’ என்ற தலைப்பிலான அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திறமையான - நிபுணத்துவம் மிக்கவர்களுக்கான - பொதுத்துறை மற்றும் தனியார் துறை ஊதியத்திற்கு இடையே பெரும் இடைவெளி விரிவடைந்து வருகின்றது. 2020 முதல் 2023 இடையில் 90 சதவீதத்திற்கும் அதிகமான அரசு ஊழியர்களின் தனிநபர் மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் சராசரி வருமானம் தனியார் சேவை ஊதியத்தை விட குறைவாக இருக்கின்றது என்பதும் அவதானிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயங்களைக் கவனத்தில் கொண்டு, அரசாங்கக் கொள்கை வகுப்பாளர்கள் உரிய மாற்றங்களை செய்வது அவசியம் என உலக வங்கி கூறியிருக்கின்றது.

மிகக் குறைந்த ஊதியம் பெறும் அரச ஊழியர்களின் வாழ்க்கைத் தரத்தை பாதுகாப்பது மிக முக்கியமானது. அதே நேரத்தில் பொதுத் துறை ஊதியக் கட்டமைப்பின் செயல் திறன், வெளிப்படைத் தன்மை மற்றும் போட்டித் தன்மையை மேம்படுத்த சீர்திருத்தங்கள் தேவைப்படுகின்றன என்கின்றது உலக வங்கி அறிக்கை.

ஒரு நீதி முறையான அணுகுமுறை மூலம் நியாயத்தை உறுதிப்படுத்தி, பாதிக்கப்பட்ட பொதுத்துறை ஊழியர்கள் மற்றும் அரச ஊழியர்களின் வருமான மேம்பாட்டுக்கான நடவடிக்கைகளை அரசு எடுப்பது இந்தக் கட்டத்தில் மிக முக்கியமானதாகும்.

# நடிகர் ரோபோ சங்கரின் உடல் தகனம்; திரையுலகினர், ரசிகர்கள் இறுதி அஞ்சலி





பிரபல நகைச்சுவை நடிகர் ரோபோ சங்கரின் உடல், வளசரவாக்கத்தில் உள்ள மின் மயானத்தில் நேற்று தகனம் செய்யப்பட்டது. இந்த இறுதி சடங்கின்போது ஏராளமான திரைக் கலைஞர்கள், சின்னத்திரை கலைஞர்கள், பொது மக்கள், ரசிகர்கள் கலந்துகொண்டனர்.

பிரபலநடிகர்ரோபோசங்கர்உடல்நலக் குறைவால் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், நேற்று முன்தினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு மஞ்சள் காமாலை காரணமாக கடுமையாக உடல் எடை குறைந்து காணப்பட்டார் ரோபோ சங்கர். பின்னர் மெல்ல தேறி வந்த அவர் மீண்டும் திரைப்படங்களிலும், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் தோன்றினார்.

இந்த சூழலில் சில நாள்களுக்கு முன்பு அவருக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்டதால், சென்னை பெருங்குடியில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. இந்த நிலையில் நேற்று முன்தினம் சிகிச்சை பலனின்றி ரோபோ சங்கர் உயிரிழந்தார்.

ரோபா சங்கரின் உடல் வளசரவாக்கத்தில் உள்ள அவரது வீட்டில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. அவரது உடலுக்கு தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் மா.சுப்பிரமணியன், நா.த.க. தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், ம.நீ.ம. தலைவர் கமல்ஹாசன், விஜயகாந்த் மகன் விஜய பிரபாகரன், நடிகர்கள் சத்யராஜ், தனுஷ், சிவகார்த்திகேயன், ராதாரவி, எம்.எஸ்.பாஸ்கர், பாண்டியராஜன், எஸ்.ஏ.சந்திரசேகர், சினேகன்,செந்தில்உள்ளிட்டோர்அஞ்சலி செலுத்தினர். மேலும், பல்வேறு திரையுலகினர், சின்னத்திரை கலைஞர்கள், அரசியல் கட்சி பிரமுகர்களும் ரோபோ சங்கர் உடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.

நேற்று மாலை ரோபோ சங்கரின் உடல், வளசரவாக்கத்தில் உள்ள அவரின் வீட்டிலிருந்து ஊர்வலமாக எடுத்து செல்லப்பட்டது. ஏராளமானமக்கள்கலந்து கொண்டதால், ஒன்றரை மணி நேரம் அவரின் இறுதி ஊர்வலம் நடந்தது. இதனையடுத்து, வளசரவாக்கம் பிருந்தாவன் நகரில் உள்ள மின் மயானத்தில் ரோபோ சங்கரின் உடல் தகனம் செய்யப்பட்டது. ரோபோ சங்கருக்கு அவரின் மகளும், மருமகனும் இறுதி சடங்குகளை செய்தனர். ரோபோ சங்கரின் இறுதி சடங்கின்போது ஏராளமான திரைக் கலைஞர்கள், சின்னத்திரை கலைஞர்கள், பொதுமக்கள், ரசிகர்கள் கலந்துகொண்டனர்.

# சின்னத்திரை முதல் வெள்ளித்திரை வரையில் தனி இடம் உருவாக்கியவர் ரோபோ சங்கர்


## விஜய் புகழஞ்சலி

தன்னுடைய நகைச்சுவை உணர்வால் சின்னத்திரை முதல் வெள்ளித்திரை வரை தனக்கெனத் தனி இடத்தை உருவாக்கிக் கொண்டவர் ரோபோ சங்கர் என்று த.வெ.க. தலைவர் விஜய் புகழஞ்சலி செலுத்தியுள்ளார்.

இது தொடர்பாக விஜய் தனது எக்ஸ் சமூகவலைதளத்தில் பகிர்ந்த பதிவில்,

“நண்பர் ரோபோ சங்கர் காலமான செய்தியறிந்து அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன். தன்னுடைய நகைச்சுவை உணர்வால் சின்னத்திரை முதல் வெள்ளித்திரை வரை தனக்கெனத் தனி இடத்தை உருவாக்கிக் கொண்டவர்.

அனைவரிடத்திலும் அன்போடு பழகும் பண்பாளர். நண்பர் ரோபோ சங்கரைப் பிரிந்து வாடும் அவரது குடும்பத்தாருக்கும் நண்பர்களுக்கும் என்னுடைய ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவரது ஆன்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறேன்.” எனக் குறிப்பிட்டுள்ளார்.







# கர்ப்பிணிகள், குழந்தைகள், மாற்று திறனாளிகள் விஜய்யின் மக்கள் சந்திப்புக்கு வர வேண்டாம்

## த.வெ.க. அறிவிப்பு

கர்ப்பிணிப் பெண்கள், கைக்குழந்தையுடன் இருக்கும் சகோதரிகள், முதியவர்கள், உடல்நலம் குன்றியோர், பாடசாலை சிறுவர், சிறுமியர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் ஆகியோர், விஜய்யின் மக்கள் சந்திப்பு நிகழ்ச்சிகளில் நேரில் வந்து கலந்துகொள்வதைத் தவிர்க்குமாறு அக்கட்சியின் பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், "த.வெ.க.தலைவர், தமிழகம் முழுவதும் அனைத்து மாவட்டங்களுக்கும் சுற்றுப் பயணம் மேற்கொண்டு மக்களை சந்தித்து வருவதை அனைவரும் அறிவீர்கள். தமிழக மக்களை உயிராகப் போற்றி மதிக்கும் அவர், தன்னை நேசிக்கும் மக்களின் பாதுகாப்பில் எள்ளளவும் சமரசம் செய்துகொள்ளாதவர். எனவே, இந்த மக்கள் சந்திப்புச் சுற்றுப் பயணத்தின்போது தொண்டர்களும், பொதுமக்களும் பின்வரும் வழிகாட்டு நெறிமுறைகளைக் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறோம்.

விஜய் மக்கள் சந்திப்பு நிகழ்ச்சிக்கு வரும் போதும், நிகழ்ச்சியை முடித்துவிட்டுச் செல்லும் போதும் அவரது வாகனத்தை யாரும் இருசக்கர வாகங்களில் அல்லது வேறு வாகனங்களில் பின்தொடர வேண்டாம்.

கர்ப்பிணிப் பெண்கள், கைக்குழந்தையுடன் இருக்கும் சகோதரிகள், முதியவர்கள், உடல்நலம் குன்றியோர், பள்ளிச் சிறுவர், சிறுமியர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் ஆகியோர், மக்கள் சந்திப்பு நிகழ்ச்சிகளில் நேரில் வந்து கலந்துகொள்வதைத் தவிர்த்து, வீட்டில் இருந்தபடியே நேரலையில் கண்டு மகிழலாம்.

மக்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வரும் நாம் அனைவரும் சகோதர சகோதரிகளே. இதைக் கருத்தில் கொண்டு பிறர் மனம் புண்படும் வகையில் பேசுவதோ அல்லது நடந்துகொள்வதோ கண்டிப்பாகக் கூடாது என்று குறிப்பிட்டுள்ளார்.

# காசாவில் உடனடி போர் நிறுத்தம் இல்லை; வீட்டோவை பயன்படுத்தியது அமெரிக்கா



உடனடியாக போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு பேரவையின் தீர்மானம் தோல்வியடைந்துள்ளது.

அமெரிக்கா மீண்டும் தனது வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி தீர்மானத்தைத் தோல்வி அடையச் செய்துள்ளது.

முன்னதாக, ஐ.நா. பாதுகாப்பு பேரவையின் 15 உறுப்பினர்களில் 14 நாடுகளால் இந்தத் தீர்மானம் அங்கீகரிக்கப்பட்டது.

இந்நிலையில் இந்த தீர்மானத்துக்கு எதிராக அமெரிக்கா வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி உள்ளது.







# காசா நகருக்குள் நுழைந்த இஸ்ரேலிய படை; மக்கள் கால்நடையாக வெளியேறுகின்றனர்

காசா நகருக்குள் இஸ்ரேலிய படைகள் நுழைந்ததை அடுத்து, ஆயிரக்கணக்கான பாலத்தீனர்கள் கடலோரத்தில் கால்நடையாக, தங்கள் குழந்தைகள், உடைமைகளை எடுத்துக் கொண்டு பிராந்தியத்தை விட்டு வெளியேறிவருகின்றனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

காசா நகரின் வடக்குப் பகுதியில் தனது ஆயுதங்கள், இராணுவ வாகனங்களை இஸ்ரேல் கொண்டுள்ள நிலையில், தெற்கு நோக்கி மக்கள் வெளியேறி வருகின்றனர்.

இஸ்ரேல் காசா நகரில் 150 இலக்குகள் மீது தாக்குதல் நடத்தியுள்ளதாக கூறுகிறது.

இதன்படி ஹமாஸ் பணய கைதிகளாக வைத்திருப்பவர்களை மீட்கவே இந்த தரைவழி தாக்குதல் நடத்தப்படுவதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் காசாவில் ஆறு லட்சத்துக்கும் அதிகாமானோர் இருக்கின்றனர் என ஐக்கிய நாடுகள் சபை கூறியுள்ளது.

இஸ்ரேலின் நடவடிக்கையை அடுத்து, ஆயிரக்கணக்கான பாலத்தீனர்கள் கடலோரத்தில் வெளியேறுகின்றனர் என தெரிவித்துள்ளது.











# அளவெட்டி அருணோதயாவில் மனைப் பொருளியல் கண்காட்சி

அளவெட்டி அருணோதயாக் கல்லூரியில் நேற்றைய தினம் மனைப் பொருளில் கண்காட்சி ஒன்று சிறப்பாக இடம் பெற்றது.

கல்லூரி முதல்வர் ஜெயானந்தன் தலைமையில் இடம்பெற்ற இவ்விழாவில் மாணவர்களின் ஆக்கங்கள் பலவும் காட்சிப்படுத்தப் பட்டிருந்தன.

இந்த விழாவில் மாணவரின் பாரம்பரிய உணவுத் தயாரிப்புக்கள் பலரையும் கவர்ந்தது. இங்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத்தின் மனைப் பொருளியல் அலகின் தலைவர் திருமதி மேனகா சிவகரனும், சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் கல்வி வலய தொழில்நுட்ப பாட ஆசிரிய ஆலோசகர் அருந்தவம் மற்றும் மனைப்பொருளியல் அலகின் விரிவுரையாளர்களான முகம்மது சாரிப், டிலக்ஷிகா ஜெயக்குமார் ஆகியோரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.















# ஏழாலையில் பூசகர் ஒருவர் மயங்கி விழுந்து உயிரிழப்பு

ஏழாலை மயிலங்காடு ஞான வைரவர் ஆலய நித்திய பூசகர் ஆலய அர்த்த மண்டபத்தில் மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் கோவில் வீதி, சுதுமலை தெற்கு, மானிப்பாயைச் சேர்ந்த பிரபாகரன் சாருஜன் (வயது 29) என்பவராவார்.

மேற்படி பூசகர் இருமல் சளி காரணமாக கடந்த செவ்வாய்க்கிழமை மானிப்பாயில் உள்ள தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளார். பின்னர் மறுநாள் சளிக்கு ஆவியும் பிடித்துள்ளார்.

இந்த நிலையில் நேற்று வெள்ளிக்கிழமை ஆலயத்துக்கு பூசைக்கு சென்ற நிலையில், அர்த்தமண்டபத்தில் மயங்கி விழுந்துள்ளார்.

உடனடியாக தெல்லிப்பளை வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போது அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என தெரிவிக்கப்பட்டது.

இந்த மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆறுமுகம் ஜெயபாலசிங்கம் விசாரணைகளை மேற்கொண்டு உடற்கூற்று பரிசோதனைக்கு உத்தரவிட்டார். சாட்சிகளை மானிப்பாய் பொலிஸார் நெறிப்படுத்தினர்.



உடற்கூற்று பரிசோதனையில் நுரையிரலில் இரத்த அடைப்பு ஏற்பட்டு மரணம் சம்பவித்ததாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

# போதை மாத்திரைகளுடன் சந்தேகநபர் ஒருவர் கைது



யாழ். காங்கேசன் துறை பிராந்திய குற்றத்தடுப்பு பிரிவினரால் நடத்தப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போது வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பிரதேசத்தில் ஐஸ், கஞ்சா போதை மாத்திரைகளுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்றைய தினம் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின் போது போதை மாத்திரை மற்றும் ஐஸ் போதைப் பொருள்கள் போன்றனவற்றை பாடசாலை மாணவர்கள் மற்றும் இளம் சமுதாயத்திற்கு விற்பனை செய்து வந்த சந்தேகநபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடம் இருந்து 20 போதை மாத்திரைகளும் 12370 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருளும் 61000 மில்லிகிராம் கஞ்சாவும் மற்றும் போதைப் பொருள் விற்பனை செய்த பணமும் அவரது வீட்டில் இருந்து தடை செய்யப்பட்ட கூரியவால் ஒன்றும் கைப்பற்றப்பட்டது.

மேற்படி, சந்தேகநபரையும் சான்று பொருள்களையும் வெல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் முற்படுத்தி பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்திற்கு முற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த சுற்றிவளைப்பு காங்கேசன் துறை பிராந்தியத்திற்கு பொறுப்பாக உள்ள சிரேஷ்ட பொலிஸ் அத்தியேட்சகர் வழிநடத்தலில் இடம்பெற்றதாக காங்கேசன்துறை விசேட குற்றத்தடுப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

# தாதியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான நேர்காணல் இன்றும் நாளையும் நடைபெறும்



கொழும்பு, களுத்துறை, கம்பஹா மற்றும் கேகாலை மாவட்டங்களில் 2025 மாணவ தாதியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான நேர்காணல்கள் இன்று மற்றும் நாளை நடைபெறும் என்று சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு தெரிவித்துள்ளது.

கண்டி, மாத்தளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களுக்கான நேர்காணல்களை மேலே குறிப்பிட்ட அதே திகதிகளில் கண்டி தாதியர் கல்லூரியில் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என அமைச்சு தெரிவித்துள்ளது.

சுகாதார மற்றும் ஊடக அமைச்சால் முன்கூட்டியே அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்ட நபர்கள் மட்டுமே இந்த நேர்காணல்களில் கலந்து கொள்ள வேண்டும் என்றும் சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு தெரிவித்துள்ளது.

# ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் கொடியேற்றம் நாளை



யாழ். வடமராட்சி துன்னாலை ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் கோவில் வருடாந்த மஹோற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 17 நாள்கள் நடைபெற உள்ளன.

எதிர்வரும் 1 ஆம் திகதி புதன்கிழமை பாம்பு திருவிழாவும், 2 ஆம் திகதி வியாழக்கிழமை கம்சன்போர் திருவிழாவும், 03 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வேட்டைத் திருவிழாவும், 4 ஆம் திகதி திகதி சனிக்கிழமை சப்பறத் திருவிழாவும், 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த் திருவிழாவும், 6 ஆம் திகதி திங்கள் கிழமை சமுத்திர தீர்த்த திருவிழாவும், 7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கேணித் தீர்த்த திருவிழாவும் இடம் பெற்று மாலை கொடி இறக்கமும் இடம்பெறும்.

# வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தில் புதிய விசேட விசாரணைப் பிரிவு ஆரம்பம்

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தில் புதிய விசேட விசாரணைப் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

பொலிஸாரின் ஒத்துழைப்புடன் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.




விசாரணைகளை விரைவுபடுத்துதல், முறைப்பாடுகளுக்கு செயற்றிறனுடன் தீர்வு வழங்குதல் மற்றும் ஆட்கடத்தலை தடுப்பதற்கான முயற்சிகளை வலுப்படுத்துதல் என்பன இந்தப் புதிய விசேட விசாரணைப் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டதற்கான நோக்கங்களாகும்.



# மின்சார ஊழியர்கள் சட்டப்படி வேலை

இலங்கை மின்சார சபை ஊழியர்கள் ஆரம்பித்த சட்டப்படி வேலை செய்யும் தொழிற்சங்க நடவடிக்கையில் நேற்று ஈடுபட்டனர்.

எதிரணி அரசியல் கட்சிகளுடன் தொடர்புடைய தொழிற்சங்கங்களுடன் இணைந்து பொறியியலாளர்கள் சங்கம் உள்ளிட்ட தொழிற்சங்கங்கள் மறுசீரமைப்பின்போது தாம் பெற வேண்டிய சலுகைகளுக்கான நிபந்தனைகளை முன்வைத்து இந்த தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுத்துள்ளன.

அரசாங்கம் 21 ஆம் திகதிக்குள் தமது கோரிக்கைகளுக்கு உரிய பதில் வழங்காத பட்சத்தில் மறுசீரமைக்கப்பட்ட குழுக்களில் இருந்து தமது உறுப்பினர்கள் விலகுவார்கள் என ஶ்ரீலங்கா சுதந்திர ஊழியர் தொழிற்சங்கத்தின் பிரதம செயலாளர் பிரபாத் பிரியந்த தெரிவித்துள்ளார்.

# 20,000 இற்கும் மேற்பட்டோர் தொழில் பாதுகாப்பற்ற நிலையில்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சுட்டிக்காட்டு

அரச பதவிகளை அனுபவித்துக் கொண்டிருக்கும் முன்னாள் தொழிற்சங்கத் தலைவர்களான தற்போதைய அமைச்சர்களால் மின்சார சபை ஊழியர்களினது தொழில்களுக்குப் பொறுப்பு கூற முடியாத நிலை ஏற்பட்டுள்ளனர் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

மிஹிந்தலையில் இடம்பெற்ற நிகழ்வொன்றின்போதே, அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அரச சேவையை வலுப்படுத்துவோம், அரச ஊழியர்களைப் பாதுகாப்போம் என்று வழங்கிய வாக்குறுதிகளை நம்பி, பெரும்பாலான அரச ஊழியர்கள் தற்போதைய திசைகாட்டி அரசாங்கத்திற்கு வாக்களித்தனர் எனினும், இன்று மின்சார சபையில் 23 ஆயிரம் பேரது தொழில்களுக்கு பாதுகாப்பற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

அரசாங்கம், அவர்களது தொழில்களுக்கு பொறுப்பேற்காது என்றும் அவர்கள் தானாக முன்வந்து ஓய்வு பெறலாம் எனவும் அதிகாரிகள் கூறுகின்றனர் என எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதிகாரத்தில் இல்லாதபோது, இந்த தொழிற்சங்கத் தலைவர்கள் மின்சார சபை ஊழியர்கள் 23 ஆயிரம் பேரது




தொழில்களைப் பாதுகாக்க உயிர் தியாகம் செய்யவும் தயாராக இருந்தனர்.

ஆனால் இன்று, அதிகாரத்துடன் அவர்கள் ஆட்சியில் இருக்கும்போது, மின்சார சபை ஊழியர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதை விடுத்து ஆட்சியைப் பாதுகாக்கும் நோக்கில் செயல்பட்டு வருகின்றனர் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் -20.09.2025




இன்று ஆன்மீகத்தில் ஈடுபடுவீர்கள். உங்கள் செயல்களை சிறந்த முறையில் செய்ய அதனை ரிலாக்ஸ் டாக செய்யுங்கள்.

வேலையில் நல்ல முடிவுகள் உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். உங்கள் பணியை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள்.

குடும்பத்தில் அமைதியை பராமரிப்பீர்கள். நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று பணம் தாராளமாக இருக்கும். ஊக்கத் தொகையாகவோ அல்லது இதர சலுகைகளாகவோ இன்று நீங்கள் பணத்தை பெறுவதற்கு வாய்ப்பு உள்ளது.

இன்று ஆரோக்கியம் நன்றாக இருக்கும்.இன்றைய நாளை நீங்கள் நல்ல முறையில் மகிழ்ச்சியுடன் கொண்டாடுவீர்கள்.




இன்று உங்களிடம் காணப்படும் பயம் காரணமாக உங்கள் தன்னம்பிக்கை குறைந்து காணப்படும். ஆதனால் உங்கள் முன்னேற்றத்தில் தடை இருக்கும். முக்கியமான முடிவுகள் எடுப்பதை இன்று தவிர்க்கவும்.

இன்று மனதை ஒருமுகப்படுத்தி பணியாற்ற வேண்டியது முக்கியம். நீங்கள் தொழில் முறை அணுகுமுறையை பராமரிப்பது நல்லது.

அன்பின்மை காரணமாக குடும்ப நல்லுறவு பாதிக்கப்படும். குடும்பத்திற்கென நேரத்தை ஒதுக்க வேண்டும்.

இன்று நிதிநிலைமை சாதகமாக இல்லை. உங்கள் செலவினங்கள் அதிகரித்து காணப்படும்.

இன்று ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டும். வயிறு உபாதைகள் நேரலாம்.




திட்டமிட்ட செயல்களின் மூலம் நீங்கள் வெற்றி பெறலாம். ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு அமைதியையும் மன நிறைவையும் பெற்றுத் தரும்.

இன்று பணியிட சூழ்நிலை சுமுகமாகவும் பயனுள்ளதாகவும் இருக்கும். புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.

அனுசரித்து நடந்தால் குடும்பத்தில் அமைதி நிலவும் அதனால் குடும்ப அங்கத்தினருள் நல்லுறவு ஏற்படும்.

இன்று உங்கள் வருமானம் அதிகரிக்கும். உங்களால் சேமிக்க இயலும்.

நீங்கள் வருத்திக் கொள்ளாமல் இருந்தால் இன்று உங்கள் ஆரோக்கியம் நல்ல முறையில் இருக்கும். அதிகம் யோசிக்காமல் உங்கள் பணிகளை ஆற்றுங்கள்.




வாழ்க்கையில் உன்னதமான குறிக்கோள்களை அடைய உங்களை நீங்களே உற்சாகப்படுத்திக் கொள்ளுங்கள். இன்றை நாள் உங்களின் பொறுமையை சிறிது சோதிக்கும் நாளாக அமையும்.

இன்று இறுக்கமான வேலை காரணமாக பிஸியாக இருப்பீர்கள். பணியில் வெற்றி காண உங்கள் சமயோசித புத்தியை பயன்படுத்த வேண்டும்.

பதட்டம் காரணமாக உங்கள் துணையுடன் பேசும் போது விரக்தியை வெளிப்படுத்துவீர்கள். அதை தவிர்க்க நேர்மறை எண்ணத்துடன் செயல்படுங்கள்.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். சேமிப்பு குறைந்து காணப்படும். அதனால் கவலைகள் ஏற்படலாம்.

இன்று ஆரோக்கியம் திருப்திகரமாக இருக்காது. தலைவலியால் அவதி ஏற்படும். பிரார்த்தனை மற்றும் தியானம் மேற்கொள்ளுங்கள்.




இன்று பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு மகிழ்ச்சி அடைவீர்கள்.

உங்கள் பணியின் வளர்ச்சி குறித்த கவலை இருக்கும். தற்போதைய கடமைகளில் அதிக கவனம் செலுத்துங்கள்.

தொடர்பு குறைபாடுகள் காரணமாக குடும்ப உறவில் அசாதாரணமான நிலை இருக்கும். முன்னெசரிக்கையுடன் இருக்க வேண்டியது அவசியம்.

நிதி வளர்ச்சி இன்று சாதகமாக இல்லை. ஸ்திரத் தன்மையை தக்க வைத்துக்கொள்ள நிதியை கவனமாக பராமரிக்க வேண்டும்.

அஜீரணக் கோளாறு அல்லது தோள் வலியால் பாதிக்கப்படுவீர்கள். உடற்பயிற்சி மேற்கொள்வது நல்லது.




உற்சாகமான கதைகளை படிப்பதன் மூலம் வெற்றியின் உயரத்தை தொடுவதற்கான உந்துதல் இன்று உங்களுக்கு கிடைக்கும்.

இன்று அதிக முயற்சியுடன் பணியாற்ற வேண்டும். பொறுமையுடன் இருந்தால் வளர்ச்சி காணலாம்.

மகிழ்ச்சியாக இருப்பதற்கு சிறிது அனுசரித்து நடந்து கொள்ள வேண்டியது அவசியம்.

நிதி சம்பந்தமான வளர்ச்சிகள் இன்று உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்காது. இன்று உங்கள் கவத்தை ஈர்க்கும் வகையில் சில சம்பவங்கள் நடக்கலாம்.

சிறிது மன அழுத்தம் இருந்தாலும் தேக ஆரோக்கியம் நன்றாக இருக்கும். நேர்மறை எண்ணத்துடன் இருங்கள்.




இன்று உங்கள் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். இன்று முழுவதும் நீங்கள் மகிழ்ச்சியுடன் காணப்படுவீர்கள்.

இன்று பணியிட சூழ்நிலை சாதகமாக இருக்காது. வேலையின் போது கவனக்குறைவு ஏற்படலாம்.

உங்கள் துணையுடன் தொடர்பு கொள்வதில் சில குறைபாடுகள் காணப்படலாம். அதில் கவனம் செலுத்தினால் அமைதியை பராமரிக்க முடியும்.

இன்று வரவும் செலவும் சேர்ந்தே காணப்படும். பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும். பல்வலியால் அவதிகள் நேரும். உணவில் கட்டுப்பாடு மேற்கொள்வது நல்லது.




இன்று நீங்கள் செய்யும் செயல்களில் கவனம் அத்தியாவசியமாக தேவைப்படும்.

முறையாக பணியை மேற்கொள் நீங்கள்இன்று அனுசரித்து நடக்க வேண்டும். அது உங்களை வளர்ச்சிப் பாதைக்கு அருகில் அழைத்துச் செல்லும்.

சில சம்பவங்களால் மன அமைதி கெடும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவ பெரியவர்களிடம் ஆலோசனை பெறுங்கள்.

இன்று உங்கள் நிதிகளை பராமரிப்பதில் நீங்கள் மிகவும் நியாயமாக நடந்து கொள்ள வேண்டும்.

இன்று ஆரோக்கியம் நன்றாக இருக்கும். பிரார்த்தனை மூலமாக நீங்கள் நேர்மறை ஆற்றல் பெற முடியும்

# இன்றைய ராசி பலன்கள் -20.09.2025




இன்று நீங்கள் நம்பிக்கை மற்றும் உறுதியுடன் செயல்பட வேண்டும்.

எதிர்பார்க்கும் பலன் கிடைக்க நீங்கள்அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். நீங்கள் அதிகமாக வேலை செய்வதன் மூலம் உங்கள் திறமையை உணர முடியும்.

குடம்ப உறுப்பினர்களிடம்ஒற்றுமை குறைந்து காணபப்டும். இன்று சுப நிகழ்ச்சிகள் நடப்பதற்கான சாத்தியம் இல்லை.

இன்று நிதி வளர்ச்சி சாதகமாக இல்லை. பணத்தை கவனமாக கையாள வேண்டும்.

அதிக வேலை காரணமாக களைப்புடன் காணப்படுவீர்கள். எண்ணெய்ப் பதார்த்தங்கள் உண்பதை தவிர்க்கவும்




ஆன்மீக காரியங்களில் உங்களை ஈடுபடுத்திக் கொள்வது உங்களுக்கு மகிழ்ச்சியையும் திருப்தியையும்அளிக்கும். நீங்கள் முன்னேற்றத்தைக் காண்பீர்கள்.

பணியில் கொடுத்த வாக்குறுதியை காப்பாற்ற முடியாத காரணத்தால் அதிருப்தி நிலவும்.

ஒற்றுமை குறைந்து காணப்படும். அனுசரித்து நடந்து கொள்ளவேண்டும்.

இன்று நிதி வளர்ச்சி சாதகமாக இல்லை. இன்று நிதிநிலையை கையாள்வதை கடினமாக உணர்வீர்கள்.

பாதுகாப்பற்றதாக உணர்வதால் ஆரோக்கியம் பாதிக்கப்படும். இரவில் உறக்கமின்மை ஏற்படும்.




உங்கள் வாழ்வில் செழிப்பைக் காண்பதற்கு நீங்கள் விஷயங்களை நல்ல முறையில் திட்டமிடல் வேண்டும்.

வேலையின் போது பதட்டம் காணப்படலாம். பணிச் சுமையை சமாளிக்க வேண்டியிருக்கும்.

குடும்பஉறவில்அன்பு குறைந்து காணப்படும். நெருக்கமானவர்களுடன் பேசும் பொழுது கவனமாகப் பேச வேண்டும்.

இன்றைய நாள் நிதி வளர்ச்சிக்கு சாதகமாக இல்லை. இன்று உங்களால் கணிசமான தொகை சேமிக்க இயலாது.

இன்று உணர்ச்சி வசப்படாமல் இருக்க வேண்டும்




இன்றைய முக்கியமான நிகழ்வுகளில் கவனம் செலுத்த வேண்டும்.

பணியிடச் சூழ்நிலை சாதகமாக உள்ளது. நல்ல பலன்கள் கிடைத்து மகிழ்வீர்கள்.

நல்லுறவில் இணக்கம் குறைந்து காணப்படும். புரிந்துணர்வும் அனுசரனையும் இருந்தால் சரி செய்து விட முடியும்.

இன்று வரவும் செலவும் சேர்ந்தே காணப்படும். திட்டமிட்டு பணத்தை சேமிப்பது நல்லது.

இன்று சில அசௌகரியங்கள் காணப்படலாம். பொறுமையுடன் இருங்கள். யோகா செய்யுங்கள்.

# மஹிந்தா - கோட்டா சந்திப்பு



முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக் ஷ நேற்று தனது சகோதரரும் முன்னாள் ஜனாதிபதியுமான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்தார்.

தங்காலை கார்ல்டன் இல்லத்திற்கு தனது மனைவியுடன் நேற்று மதியம் சென்ற கோட்டாபய ராஜபக் ஷ, மஹிந்த ராஜபக்ஷவுடன் நீண்ட நேரம் உரையாடினார்.

இரண்டரை மணி நேரத்திற்கும் மேலாக நீடித்த இந்த உரையாடல், குடும்ப விவகாரங்கள் குறித்து கவனம் செலுத்தியது.

மேலும், தற்போதைய அரசியல் நிலைமை குறித்தும் சில விவாதங்கள் நடந்ததாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தங்காலை கார்ல்டன் இல்லத்தில் மஹிந்த ராஜபக்ஷவுடன் இரண்டரை மணி நேரத்திற்கும் மேலாக செலவிட்ட கோட்டாபய ராஜபக்ஷ, மஹிந்த ராஜபக்ஷவுடன் மதிய உணவையும் உண்டார் என தெரிவிக்கப்படுகிறது.

அதன்பிறகு, கோட்டாபய ராஜபக் ஷ கொழும்புக்குத் திரும்பினார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.